# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1658/19 - 2010 ජූනි 16 වැනි බදාදා - 2010.06.16

*1658/ 19 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆந் திகதி புதன்கிழமை*

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

*ச. அ. இல : சிஏ/3/3/24.*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி**
**அதியுத்தமராம் மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால்**

முத்திரை

மஹிந்த ராஜபக்ஷ.

1. சனாதிபதி வழக்குரைஞர் சித்த ரஞ்சன் த சில்வா அவர்கள்
2. சனாதிபதி வழக்குரைஞர் கலாநிதி அம்ரித் ரொஹான் பெரேரா அவர்கள்
3. பேராசிரியர் மொஹமட் தாஹிர் மொஹமட் ஜிப்ரி அவர்கள்
4. பேராசிரியர் கருணாரத்ன ஹங்கவத்த அவர்கள்
5. திருவாளர் சந்திரபால் சண்முகம் அவர்கள்
6. திருவாளர் ஹேவா மாத்தர கமகே சிறிபால பளிஹக்கார அவர்கள்
7. திருமதி மனோஹரி ராமநாதன் அவர்கள்
8. திருவாளர் மெக்ஸ்வெல் பராக்கிரம பரணகம அவர்கள்

ஆகியோருக்கு

வாழ்த்துக்கள் !

முழுதளவில் இந்நாடு எதிர்நோக்கியிருந்த மோதல் காலகட்டமும் அநுபவித்த இன்னல்களும் குறித்து மீண்டும் நினைத்துப்பார்ப்பதற்கு வேளை வாய்ப்பானதொரு சந்தர்ப்பம் உருவாகியிருப்பதாக நான் கருதுகின்றேனாதலாலும், அனைவரினதும் பொதுவான வேணவாவின் மீது கவனம் செலுத்தி எமது மக்களுக்கு அமைதியானதும் இசைவானதும் சுபீட்சமானதுமான ஓர் எதிர்காலத்தை உருவாக்கிக்கொடுக்க ஐயமற நாம் கூட்டாக மனவுறுதி பூண்டுள்ளதாதலாலும்,

பல்லின ஆட்சியமைப்பொழுங்குடைய சமூகமொன்றைக்கொண்ட சுயாதீனமானதும் பெருமைக்குரியதுமான தேசியமாக நாம் ஒத்துழைப்புடனும் கூட்டுப் பங்காண்மையுடனும் சிநேகபூர்வமாகவும் பொதுவான இலக்குகளை நோக்கிய பயணத்தை ஆரம்பித்துள்ளதுடன், ஒருவரையொருவர் அழிக்கின்ற எந்தவொரு மோதல் நிலையும் எதிர்காலத்தில் மீண்டும் இடம்பெறாதிருப்பதை உறுதிசெய்வதற்கான பாடங்களை அண்மைக்கால வரலாற்றிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளதாதலாலும்,

இதனகத்துப்பின்னர் குறிப்பிடப்படும் கருமங்கள் தொடர்பில் விசாரணை ஆணைக்குழுவொன்றைத் தாபிப்பது பொதுமக்கள் நலனுக்கு அவசியமானதென எனக்குத் தோன்றுகின்றதாதலாலும்,

ஆகவே, இப்பொழுது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி, மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், உங்கள் விவேகம், திறமை, தற்சார்பு, நேர்மை என்பன பற்றி மிகுந்த நம்பிக்கையும் பற்றுறுதியும்கொண்டு, (393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றி, சொல்லப்பட்ட,

1. சனாதிபதி வழக்குரைஞர் சித்த ரஞ்சன் த சில்வா அவர்கள்
2. சனாதிபதி வழக்குரைஞர் கலாநிதி அம்ரித் ரொஹான் பெரேரா அவர்கள்
3. பேராசிரியர் மொஹமட் தாஹிர் மொஹமட் ஜிப்ரி அவர்கள்
4. பேராசிரியர் கருணாரத்ன ஹங்கவத்த அவர்கள்
5. திருவாளர் சந்திரபால் சண்முகம் அவர்கள்
6. திருவாளர் ஹேவா மாத்தர கமகே சிறிபால பளிஹக்கார அவர்கள்
7. திருமதி மனோஹரி ராமநாதன் அவர்கள்
8. திருவாளர் மெக்ஸ்வெல் பராக்கிரம பரணகம அவர்கள்

ஆகிய உங்களை, 2002 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதியிலிருந்து 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதி வரையான காலப்பிரிவினுள் இடம்பெற்றிருக்கக்கூடுமெனக் கருதப்படும் பின்வரும் கருமங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையிடுவதற்காக எனது ஆணையாளர்களாக இருக்கவென இத்தால் நியமிக்கின்றேன் :

1. 2002 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதி அமுல்படுத்தப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை தோல்வியில் முடிவடையத் தூண்டுதலளித்த விடயங்களும் சூழ்நிலைகளும், அதனகத்துப்பின்னர் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதி வரையில் இடம்பெற்ற தொடர் வரிசையான நிகழ்வுகளும் ;

2. ஆளெவரும், குழுவெதுவும் அல்லது நிறுவனமெதுவும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இது தொடர்பில் பொறுப்பு வகிக்கின்றதா ;

3. அத்தகைய நிகழ்வுகள் மீண்டும் ஏற்படாதென்பதை உறுதி செய்யும் பொருட்டு அத்தகைய நிகழ்வுகளிலிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்களும் எமது கவனம் ஈர்க்கப்படவேண்டிய உடனிகழ்வான விடயங்களும் ;

4. அத்தகைய நிகழ்வுகள் காரணமாக பாதிப்புக்குள்ளான ஆளெவருக்கும் அல்லது அவர்களில் தங்கிவாழ்வோருக்கும் அல்லது உரித்தாளிகளுக்கும் மீளளிப்புச் செய்யத்தக்க முறைமை ;

5. அத்தகைய நிகழ்வுகள் எவையும் எதிர்காலத்தில் மீண்டும் ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டும் சகல சமூகங்களுக்கும் இடையில் மென்மேலும் தேசிய ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையும் மேம்படுத்தும் பொருட்டும் எடுக்கப்படவேண்டிய நிறுவனம் சார்ந்த, நிர்வாகம் சார்ந்த, சட்டவாக்கம் சார்ந்த நடவடிக்கைகளும் இவ் ஆணைப்பத்திரத்தின் நியதிகளின் கீழ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட விடயங்களில் யாதேனுமொரு விடயம் தொடர்பிலான அத்தகைய வேறேதேனும் விதப்புரைகளை முன்வைத்தலும்,

அத்துடன், சொல்லப்பட்ட சனாதிபதி வழக்குரைஞரும் இளைப்பாறிய சட்டத்துறை தலைமையதிபதியுமான சித்த ரஞ்சன் த சில்வா ஆகிய உங்களை, மேற்சொல்லப்பட்ட ஆணைக்குழுவின் தவிசாளராக இருக்கவென இத்தால் நியமிக்கின்றேன்.

அத்துடன், சொல்லப்பட்ட ஆணையாளர்களான தங்களுக்கு மேற்போந்த கருமங்களைப் பற்றி அவசியமானதெனத் தோன்றுகின்றவாறான அத்தகைய விசாரணைகளை நடாத்துவதற்கும், அத்தகைய வேறு எல்லாப் புலனாய்வுகளைச் செய்வதற்கும் அதிகாரமளித்து தத்துவமும் வழங்குகின்றேன். அத்துடன், இதனகத்துக் குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து இதனுடன் தொடர்பான தங்களின் விசாரணைகளின் காண்புகளையும், தங்கள் விதப்புரைகளையும் தருகின்ற அதன் மீதான ஓர் அறிக்கையை ஆறு மாத காலத்துள் தங்கள் கைப்பட எனக்கு அனுப்பிவைக்குமாறு தங்களை இத்தால் தேவைப்படுத்துகின்றேன்.

அத்துடன், மேற்சொல்லப்பட்ட கருமங்கள் தொடர்பாக பகிரங்கமாக நடாத்தப்படக்கூடாதென தங்கள் தற்றுணிபின் பேரில் தாங்கள் தீர்மானிக்கக்கூடியவாறான ஏதேனும் விசாரணையில் அத்தகைய பாகம் அவ்வாறு நடாத்தப்படல் ஆகாதென இத்தால் நான் தங்களைப் பணிக்கின்றேன்.

அத்துடன், எந்தப் பகிரங்க அலுவலரிடமும், வேறெந்த ஆட்களிடமும் நீங்கள் உதவி அல்லது தகவல் கோருகின்றீர்களோ, அந்தப் பகிரங்க அலுவலர்கள் மற்றும் வேறு ஆட்கள் அனைவரையும் அதன் சார்பில் முறையாக அளிக்கப்படக்கூடியனவும், கொடுத்துதவப்படக்கூடியனவுமான அத்தகைய எல்லா உதவிகளையும் அளிக்குமாறும், அத்தகைய தகவல்களையும் கொடுத்துதவுமாறும் இத்தால் நான் தேவைப்படுத்திப் பணிக்கின்றேன்.

அத்துடன், (393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், இந்த ஆணைக்குழுவுக்கு ஏற்புடையனவாதல் வேண்டுமென இத்தால் நான் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலச்சினையின் கீழ் இரண்டாயிரத்து பத்தாம் ஆண்டு மே மாதம் பதினைந்தாம் நாளாகிய இன்று, கொழும்பில் அளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

லலித் வீரதுங்க,
சனாதிபதியின் செயலாளர்.

7-98

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.